Registered asa News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 333 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 14 ஆம் நாள் ரம்ளான் 11 27-1-64 திங்கட்கிழமை இதழ் 3:0

உரம்

சகலவிதமான பயிர்களுக்கும் வேண்டிய பசளை பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மா. கிருஷ்ணபிள்ளை
அளவெட்டி.

# உண்ணாவிரதம் முடிவு

## பெப்ரவரி 17-க்குமுன் நேரடி நடவடிக்கை

### தமிழரசுக் கட்சி கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானம்

வவனியா, ஞாயிறு

தமிழ் பகுதிகளில் சிங்களத் திணிப்பை எதிர்த்து அடுத்த மாதம் 17-ந் திகதிக்கு முன் நேரடிநடவடிக்கையில் இறங்குவதென, வவனியாவில் இன்று திரு. எஸ். எம். ராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. வவனியா பட்டினசபை மண்டபத்தில் நடைற்ற இக்கூட்டத்தில் தற்பொழுதுள்ள நிலைமையில் நேரடிநடவடிக்கையில் இறங்க வேண்டிய அவசியத்தைப் பற்றி பலர் வற்புறுத்திப் பேசினர்கள்.

இன்று மாலை 4 மணிக்கு தமிழரசுக்கட்சிக் கிளை ஒன்று வவனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மலைநாட்டில் எழுந்துள்ள நிலைமை பற்றி திரு. அமிர்தலிங்கம் எடுத்துக்கூறினர். டாக்டர் நாகநாதன் மலைநாட்டில் தொடர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்து வருவதால் இக் கூட்டத்தில கலந்துகொள்ளவில்லை.

இலங்கையின் சுதந்திரதினமா பெப்ரவரி நான்காம் திகதியன்று தமிழ் பகுதிகளில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் கமிட்டிக் கூடடத்தில் முடிவு செய்யப்பட்டது.

---

கிரிக்கெட்

### வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது

பம்பாய், ஜன. 26

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதாக கடைசியாக வந்த செய்தி தெரிவிக்கிறது.

---

### 88 குளங்கள் திருத்தப்படும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் காடடுபபகுதியிலுள்ள 88 குளங்களைத் திருத்தியமைக்க நீர்ப்பாசனப் பகுதி முடிவு செய்துள்ளது.

இக்குளங்கள் திருத்தப்பட்ட பின வேலையற்றிருக்கும் மாணறச்களுக்கென இப்பகுதிகளில் குடியேற்றத்திட்டத்தை அமுல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

## தமிழில் எழுதிய கடிதத்தை அரசாங்க அதிபர் மறுத்தார்!

### சிங்களத்தில் எழுதுமாறு நகரசபைத் தலைவருக்குப் பதில்

திருக்கோணமலை, ஞாயிறு

அரசாங்க அதிபருக்கு திருக்கோணமலை நகரசபைத தலைவர் தமிழில் எழுதிய ஒரு கடிதத்தை அவர் திருப்பி அனுப்பியதுடன் சிங்களத்தில்தமக்கு எழுதுமாறு சிங்களத்தில் எழுதியும் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

திருகோணமலை நகரில் சட்டவிரோதமாகக் கொட்டில்கள் கிளம்பிவருவதாகவும், சட்டவிரோதமாக இதைச் செய்து வருபவர்மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரி திருக்கோணமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தம் அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இக்கடிததத்தை அரசாங்க அதிபர் திருப்பியனுப்பியதுடன் தமக்கு எழுதும் கடிதங்களைச் சிங்களத்தில் எழுதுமாறும் அரசாங்க அதிபர் சிங்களத்தில் குறிப்பு எழுதி அனுப்பியுள்ளார்.

சகல அலுவல்களையும் தமிழில் செய்வதென்பதுதான் திருக்கோணமலை நகரசபையில் கொள்கையாதலால் தமிழில் தவிர தாம் வேறு எந்த மொழியிலும் அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதப்போவதில்லையென டாகடர் சிவானந்தம் தெரிவித்தார்.

**சிங்களத்தில் காசோலைகள்**

திருக்கோணமலையிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இம்மாதச் சம்பளம் பெறுவதில் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். சம்பளப்பணம் சிங்களக் காசோலைகளாககல்வி இலாகாவிலிருந்து வந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

---

## உறவினர் வற்புறுத்தலுக்கு தென்னக்கூன் பணிந்தார்

கொழும்பு, ஞாயிறு

**உண்ணாவிரதமிருந்த திரு. முதியான்சே தென்னக்கூன் இன்றுகாலை தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டு விட்டார். நண்பர்களும், உறவினர்களும் வேண்டிக் கொண்டதற்கிணங்க திரு. தென்னக்கூன் தமது ஆறுநாள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.**

அவரது தாயார் கொடுத்த நீரை அருந்தியபின் அவரது உண்ணவிரதம் நின்றது.

சடந்த ஒருவார காலமாக உண்ணாவிரதமிருந்த திரு. தென்னக்கூனின் உடல்நிலை கடைசி மூன்று தினங்களாக மோசமடைந்து வந்தது.

அரசாங்கத்தின் சார்பாக மந்திரி திரு. டி. பி. இலங்கரதன திரு. முதியான்சேயை அணுகி உண்ணவிரதத்தைக் கைவிடுமாறு கோரியும், அவர் பிடிவாதமாக மறுத்து உயிர் விடடப்போவதாகத் தெரிவித்தது தெரிந்திருக்கும்.

திரு. தென்னக்கூனின் கோரிக்கை பற்றி இனி அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

---

### கானாவில் சர்வாதிகாரத்துக்கு ஆதரவு

ஆக்ரா, ஜன. 26

கானாவில் ஒரு கட்சி ஆட்சி ஏற்படவேண்டுமா என்பது பற்றி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் நாலரை லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் சாதகமாகவும், 2000 பேரே எதிராகவும் வாக்களித்திருக்கின்றர்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஜனதிபதி நிக்ருமாவின் மக்கள் கட்சி இப்போது அங்கு ஆட்சி நடத்தி வருகிறது. டாக்டர்நிக்ருமா சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள், உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஆகியோரைப் பதவி நீக்கும் உரிமையை இதன் மூலம் பெறுவார்.

---

### கிராமசேவகருக்கு எச்சரிக்கை செய்தி

கொழும்பு, ஞாயிறு

22-வது சீனி அரிசிக் கூப்பன்கள் வழங்கப்படும்போது, தலைமைக்காரர் ஜாபிதாவில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களின் பெயர்கள் சேர்க்கப் படாமல் பார்த்துக்கொள்ளும்படி உள்நாட்டு அமைச்சு சகல கிராமசேவகர்களையும் கேட்டிருக்கிறது. இந்த ஜாபிதாவை தயாரிக்குமுன், ஒவ்வொரு கிராமசேவகரும் ஒவ்வொரு வீட்டுக்கும் நேரில் விஜயம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

---

### அவாமி லீக் உயிர்பெற்றது

கராச்சி, ஜன 26

பாகிஸ்தானில் அவாமி லீக் கட்சி மீண்டும் இன்று உருவெடுத்தது. மக்களுக்குப் பூரண அடிப்படை உரிமை வழங்கவேண்டும் என்றும் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்படுத்தவேண்டும் என்றும் இக்கட்சி கோருகிறது.

---

### இன்று சதிவழக்கு விசாரணை

கொழும்பு, ஞாயிறு

புரட்சிச் சதிவழக்கில் சம்பந்தப்பட்ட 22 சந்தேகநபர்கள் மீதான வழக்கு விசாரணை மீண்டும் நாளை ஆரம்பிக்கப்படும். இதுவரை அரசாங்கத்தின் சார்பில் 30 சாட்சியங்கள் பதிவாகியுள்ளன.

---

## கோலாகலமான இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டம்

### லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்

புதுடில்லி, ஜன. 26

**இன்று நடைபெற்ற பாரதக் குடியரசு தினக்கொண்டாட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஜனதிபதி ராதாகிருஷ்ணன் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். சுகவீனமுற்று உடல் தேறி வரும் பிரதமமந்திரி திரு நேருவும் வைபவத்தில் கலந்து கொண்டார்.**

6 குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஜனதிபதி மேடையை நோக்கி பவனி வந்தபோது தேசியக் கொடி உயர்த்தப்பட்டு, 31 தடவை பீரங்கிகள் முழங்கின. வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்ஸி, லடாக் ஆகிய இடங்களில் சீனர்களுக்கு எதிராக தீரச்செயல் காட்டிய 3 ராணுவஸ்தர்களுக்கு "பரம்வீர்" சக்கரம் இந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. மேஜர் ஜெனரல் தாப்பாவுக்கும், உயிரிழந்த லெப்டினன்ட் ஜெனரல் சைத்தான்சிங், ஜொகிந்தர் ஆகியோர்களுக்கும் இவை வழங்கப்பட்டன. கடைசி இருவரின் சார்பாக அவர்களது விதவைகள் அதைப்பெற்றனர்.

நாட்டின் நெருக்கடி நிலைமையை முன்னிடு அடக்கமாக இருந்தபோதிலும், அதில் காணப்பட்ட கலை நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன.

பலமுனைகளிலும் போர் செய்து புகழ்பெற்ற 3000 வீரர்கள் மேஜர் ஜெனரல் பக்வதிசிங்கின் தலைமையில் அணிவகுத்துச் சென்றனர். கனரக டாங்கிகள், பீரங்கிகள், பல்வேறு வகையான ஆயுதங்களுடன் ஆயுதப்படைகளும் அணிவகுப்பில் கலந்துகொண்டன. குதிரைப்படையினர், ஒட்டகப் படையினர் ஆகியோரும் காண பட்டனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்களும், சமூகத்தின் இதர பிரிவினரும் அணிவகுப்பில் கலந்து கொண்டனர். 'ஜய்ஹிந்த', 'பாரதமாதாவுக்கு ஜே!' என்ற கோஷங்களுடன் அவர்கள் அணிவகுத்துச்சென்றனர். தமிழ்நாடு, பஞ்சாப், நேபா, மணி பூர் ஆகிய இடங்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அணிவகுப்பின் இறுதியாக 35 ஜெட் விமானங்கள் வானில் பறந்துசென்றன. கடைசியில் சென்ற மூன்று விமானங்கள் இந்திய தேசியக் கொடியின் மூவர்ணங்களை ஆகாயத்தில் விட்டுச்சென்றன. பின் பெரிய பலூன்கள் தேசியக் கொடியின் நிறங்களுடன் ஆகாயத்தில் பறக்கவிடப்பட்டன.

(6-ம் பக்கம் பார்க்க)

## மணி வாக்கு

சகல ஜீவன்களும் தமது கருமத்தைச்செய்தே தீருகின்றன. கஷ்டப்பட்டே ஜீவிக்கின்றன. எப்பொழுதும் ஓய்வுடன் இருப்பவன் ஒன்றையும் அனுபவிக்க மாட்டான்.

—பகவத்கீதை.


# ஈழநாடு

EELA NADU

ESLANADU: National Tami Daliy Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு தை மீ 14 வ. (27-1-64)


## மலைநாட்டு மக்கள் துயர்

மலைநாட்டில் தோட்டப்பகுதியிலுள்ள இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள், சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது திடீர் திடீரெனப் பெருமளவில் கைது செய்யப்படுகிறார்களென்றும் உடனடியாக கும்பனித் தெருவிலுள்ள முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்களென்றும் வெளியாகியுள்ள செய்திகள், ஏற்கனவே கவலையுடன் வாழும் சிறுபான்மை மக்களுக்கு மேலும் பீதியை அளிப்பதாகும். அட்டன், தலவாக்கொல்லைப்பகுதியில் சென்ற சில தினங்களாக தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவில் கைது செய்யப்படுகிறார்களென்றும் நகரப் பகுதிகளுக்குச் செல்வதற்கே அஞ்சுகிறார்களென்றும் அப்பகுதிக்கு நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்த நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கமும் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய நிலைமையும் ஏற்படக்கூடுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டப் பகுதிகளிலுள்ள தொழிலாளர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது கண்ட கண்ட இடங்களில் கைது செய்து இம்சிக்கப்படுவதை உடனடியாக நிறுத்தாவிட்டால் தாங்கள் மிகக்கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பொலிஸ் அதிபருக்குத் தெரிவித்துள்ளாராம். தோட்டத் தொழிலாளர் கைது செய்யப்பட்டு இம்சிக்கப்படுவதால் தோட்டத்தில் வேலைகள் ஸ்தம்பிக்கக் கூடுமென்று அவரும் ஓர் அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்னை பற்றி நாம் இப்பத்திகளில் பல தடவை குறிப்பிட்டிருக்கிறோம். சென்ற வாரம் கூட, அரசிலருக்குப் புதிய பாதுகாப்பளிக்கச் சட்டம் கொண்டுவரவிருப்பது சம்பந்தமாக நாம் எமது அபிப்பிராயத்தை இங்கு தெரிவிக்கையில், புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வந்து மக்களுக்கு மேலும் மேலும் கஷ்டமிழைப்பதைவிடுத்து இப்பிரச்னைக்கு இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து நிரந்தரமான ஒரு தீர்வுகாண வேண்டுமெனக் கூறியிருந்தோம்.

மலைநாட்டில் வாழும் இந்திய வம்சாவளியினர் தலைமுறை தலைமுறையாக இந்த நாட்டையே தாயகமாகக் கொண்டு வாழ்பவர்கள். வெளிநாட்டு மண்ணைக் கூட பார்த்தறியாதவர்கள் பலர். பிரஜாவுரிமை வாக்குரிமைச் சட்டங்களில் அனாதைகளாகிய இந்த மக்கள் இப்பொழுது 'சட்டவிரோதக் குடியேற்றக்காரர்' என்ற சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு இம்சிக்கப்படுகின்றனர்.

இந்தியப் பிரஜைகளென்றால் இவர்கள் விஷயத்தில் இந்திய அரசாங்கம் அக்கறையெடுக்கும். இலங்கைப்பிரஜைகள் (இதை நிரூபிக்க வேண்டும்) என்றால் இலங்கை அரசாங்கத்துக்கு முறையிட்டுத் தப்பித்துக் கொள்ளலாம். இந்தியப் பிரஜையாகவோ இலங்கைப் பிரஜையாகவோ இல்லாமல் வாழும் இம்மக்கள்மீது திடீரெனப் பொலிசார் இவ்வித நடவடிக்கை எடுப்பானேன்?

சென்றவாரம் செனட்சபையில் வெளிவிவகாரக்கொள்கை மீது நடைபெற்ற விவாதத்தில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர் உட்பட இலங்கையிலுள்ள இந்தியவம்சாவளியினர் பற்றித் தெரிவித்த கருத்துக்களுக்கும் பொலிசாரின் இந்த நடவடிக்கைக்கும் சம்பந்தமிருக்குமா என்பதும், "நாடற்றவர்" என்ற ஒரு பிரிவை ஏற்படுத்தியது இலங்கையில் ஹைகமிஷனராகவிருந்த திரு. வி. வி. தேசாய்தானென்றும் 'நாடற்றவர்' என்பதை இலங்கை ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லையென்றும் பிரதமர் செனட்டில் கூறிய தற்கும் பொலிசாரின் நடவடிக்கைக்கும் சம்பந்தமுண்டா என்பதும் நன்கு ஆராயப்பட வேண்டிய விஷயங்கள்.

எது எப்படியிருப்பினும் மலைநாட்டிலுள்ள மக்கள் பிரச்னை மனிதாபிமானப் பிரச்னை. இதை 'சட்டவிரோதக் குடியேற்றம்' என்ற போர்வையிலோ பொலிசாரின் கெடுபிடி நடவடிக்கைகளாலோ தீர்த்துவிட முடியாது.

இந்திய வம்சாவளியினர் பிரச்னையைத் தேசியப் பிரச்னையாகக் கருதி தீர்க்க சகல அரசியல் கட்சிகளும் உதவ வேண்டுமென்று பிரதமர் சிறிமா மீண்டும் தெரிவித்திருக்கிறார். இதை இந்திய அரசாங்கத்தின் நட்புறவுடனும் நல்லெண்ணத்துடனும் தீர்க்கலாமென்றும் அவர் நம்பிக்கையும் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் கட்சிகளையும் இந்திய வம்சாவளியினருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஸ்தாபனங்களையும் அழைத்து இப்பிரச்னைபற்றிக் கலந்தாலோசித்து, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் தீர்வு காண்பதற்கு உண்மையில் பிரதமர் முயற்சி செய்தால், அவரது நம்பிக்கை வீண் போகாது. இந்திய வம்சாவளியினர் பிரச்னைக்கு எவ்வளவு விரைவில் தீர்வு காண முடியுமோ அவ்வளவு விரைவில் தீர்வு கண்டால் சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்னையும் தானாகவே தீர்ந்துவிடும்.

உடனடியாக இவ்விஷயத்தில் தீர்வு காண முயற்சி செய்வதுடன் இந்நாட்டையே தஞ்சமென வாழும் மக்களைப் பொலிஸார் இம்சித்து அவர்களின் சாபத்தைப் பெற்றுக் கொடுக்காமல் பொலிசாரின் அவசர நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதும் பிரதமரின் கடமையாகும். மலைநாட்டில் மக்கள் விடும் கண்ணீரைத் துடைக்க வேண்டியது ஒரு மாதாவாகிய நமது பிரதமரின் பொறுப்புமாகும்.

# கட்டைவேலி கிராமசபை தேர்தல் முடிவு

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டைவேலி கிராமசபையின் பதினன்கு வட்டாரங்களுக்கும் நேற்று நடைபெற்ற தேர்தலில் எட்டுப்பேர் கட்டுப்பணம் இழந்தனர். தேர்தல் முடிவு விபரம் வருமாறு:—

1-ம் வட்டாரம்:
கனகரத்தினம் செல்லையா- 266, சீனியன் நாகன்- 144, கந்தவனம் சுப்பர்- 40 *, கார்த்திகேசு மயில்வாகனம்- 10 *.

2-ம் வட்டாரம்:
திருஞானசம்பந்தபிள்ளை நவரத்தினசாமி- 212, விவேகானந்தன் க. தியாகராசா- 172.

3-ம் வட்டாரம்:
கணேசன் சின்னப்பு- 337, சின்னத்தம்பி சின்னையா- 306

4-ம் வட்டாரம்:
மணிவாசகப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை- 303, கணேசு பொன்னையா 19 *.

5-ம் வட்டாரம்:
இராமலிங்கம் சச்சிதானந்தம் (தற்போதைய தலைவர்).

6-ம் வட்டாரம்:
மயில்வாகனம் கார்த்திகேசு- 319, வேலும் மயிலும் சுந்தரம்- 253, கணபதி கந்தன்- 95.

7-ம் வட்டாரம்:
வல்லிபுரம் முருகேசு- 397, மாணிக்கம் கதிர்காமு- 341, மார்க்கண்டு கார்த்திகேசு- 31*.

8-ம் வட்டாரம்:
குமாரசாமி வைத்திலிங்கம்- 293, மார்க்கண்டு கார்த்திகேசு- 238, சுப்பிரமணியம் மூத்தார் தாமோதரம்பிள்ளை- 235.

9-ம் வட்டாரம்:
வல்லிபுரம் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை- 214, வேல் முருகு வேலுப்பிள்ளை- 180, தியாகராசா கனகரத்தினம்- 132, பொன்னுத்துரை மார்க்கண்டு- 08 *.

10-ம் வட்டாரம்:
திருநாவுக்கரசு கணபதி- 354, தங்கவடிவேல் சுப்பிரமணியம்- 244.

11-ம் வட்டாரம்:
ஞானாசகரம் சின்னையா- 228, வீரன் சின்னவன்- 113, கணபதிப்பிள்ளை மயில்வாகனம் 54, திருமதி பசுபதி சிவவிநாயகம்- 08 *.

12-ம் வட்டாரம்:
நடேசன் வேலன்- 226, கார்த்திகேசு கதிரகாமர்- 212, சிவயோகம் புண்ணியன்- 121, செல்லன் கந்தன்- 25 *, செல்லையா நாராயணர்- 00 *.

13-ம் வட்டாரம்:
தங்கராசா செல்லையா 495, மயில்வாகனம் சின்னையா- 249.

14-ம் வட்டாரம்:
சிதம்பரப்பிள்ளை கதிரேசு- 648, கந்தையா வேலுப்பிள்ளை- 367, கந்தன் ஆழ்வான்- 271, சதாசிவம் வேலாயுதம்- 05 *.

* கட்டுப்பணம் இழந்தனர்.

[வெற்றிபெற்ற அபேட்சகர் விபரம் மட்டும் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையின் சில பதிப்புகளில் வெளிவந்தன.]

# "சமூகத்துக்கு நன்மையானதை நான் செய்தேன்"

## விருந்துபசாரத்தில் முன்னுள் உதவி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

"நான் ஒரு பிரச்னைக்குரிய மனிதனாகவும், அபிப்பிராய பேதத்துக்குரிய மனிதனாகவும் விளங்குவதாக பலரும் கூறுகிறார்கள். நானும் இதை அறிந்திருக்கின்றேன். இதற்கு சமயம், அரசியல் ஆகிய இரண்டுமே தான் காரணமாக இருக்க முடியும்" என்று ஓய்வுபெற்ற உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் வட இலங்கை ஆசிரியர்களால் அளிக்கப்பட்ட மத்தியான விருந்துபசாரத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சுமார் நூற்றைம்பது ஆசிரியர்கள் கலந்து கொண்ட இவ் விருந்துபசாரத்திற்கு பார்லிமெண்ட் அங்கத்தினர் இருவர் அழைக்கப்பட்டிருந்தனர் எனினும் அவர்கள் சமுகமளிக்கவில்லை.

உபசரணைச் சபைத் தலைவர் ஆசிரியமணி திரு. நா. தம்பிரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விருந்தில் திரு. ஆர். கந்தையா பேசுகையில் திரு. சோமசேகரத்தின் குணதிசயங்களைப் பாராட்டினர். திரு. என். சபாரத்தினம் பேசுகையில் திரு. சோமசேகரத்தின் குணதிசயங்களைப் பாராட்டினர். "ஆசிரிய உலகத்தில் மட்டுமல்லாது இதர துறைகளில் உள்ளவர்களும் கூட எங்கும் எப்பொழுதும் பேசும் அளவுக்கு பிரச்னைக்கும் அபிப்பிராயத்துக்கும் உரியவராக திரு. சோமசேகரம் விளங்குகிறார்" என்று திரு. சபாரத்தினம் கூறினர்.

தமக்களிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்து திரு. சோமசேகரம் பேசுகையில் தாம் பிரச்னைக்கும் அபிப்பிராய பேதத்துக்கும் உரிய மனிதனாக விளங்குவதற்கு சமயமும் அரசியலும் தான் காரணமாக இருக்கமுடியு மென்றார்.

"சைவப் பிள்ளைகளானல் சைவசமயக் கல்விபெற வேண்டும்; கிறிஸ்தவ,முஸ்லிம் பிள்ளைகளானல் அந்தந்தசமயக் கல்வியை அவர்கள் பெறவேண்டுமென்பது எனது கொள்கை. இதை நிறைவேற்ற நான் உழைத்தேன் இது பலருக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். இதனலும் நான் பிரச்னைக்குரியவனுனேன். இதை இப்பொழுதுள்ள வார்த்தையில் சொல்வதனல் 'கத்தோலிக்க, அல்லது கிறிஸ்தவ நடவடிக்கை" என்று சொல்லலாம்" என்று திரு. சோமசேகரம் கூறினர்.

அரசியலைப் பொறுத்தவரையில் இளவயதில் தாம் அரசியலில் தீவிர பங்குகொண்டிருந்ததாகவும் கடந்த சில வருடங்களாக அரசியலிலிருந்து ஒதுங்கி தமது மனச்சாட்சிகு எது சரியெனத் தோன்றுகிறதோ அதை கடவுளுக்குப் பயந்து சமூக நன்மைக்கானவற்றைச் செய்துவந்ததாகவும் திரு. சோமசேகரம் தெரிவித்தார்.

"இன்றுள்ள பிரச்னைகள்மட்டுமல்ல இனியும் நமது சமூகத்துக்குப் பல பெரிய பிரச்னைகள் வரக்கூடும் இப்பிரச்னைகளுக்கு அரசியல் ரீதியாக மட்டுமல்லாது சமயத்துறை வாயிலாக இறைவனை வழிபட்டு என்னென்ன முறையில் தீர்வுகாண முடியுமென்பது பற்றி இப்பொழுதும நான் சிந்தனை செய்து வருகிறேன்" என்று அவர் கூறினர்.

# 'பாண்டேஜ்' துணி தட்டுப்பாடு

நல்லூர், ஞாயிறு

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் 'பாண்டேஜ்' துணிக்கு இப்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மருந்து கட்டச்செல்லும் நோயாளிகள் தாமாகவே துணி கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரியில் சில முக்கியமான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

# முனீஸ்வரன் கோயிலில் தைப்பூச விழா

யாழ்ப்பாணம், திங்கள்

வருடாவருடம் நடைபெறுவதுபோல் இவ்வருடமும் யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் தைப்பூச விழா சிறப்பாகக் கொண்டாடப்படுமென அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை சைவ ஊழியர் சங்கத்தினல் நடத்தப்படும் இத் திருவிழாவில் விசேஷ மேளக் கச்சேரியும், சமயச் சொற்பொழிவும் கதாப்பிரசங்கமும் நடைபெறுகிறது.

நாளை பகல் ஸ்நமன அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும். மாலையில் மேளக்கச்சேரியும் அதன் பின் சைவப்புலவர் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, "அப்பர் காட்டிய பாதையிலே" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார் பின்னர், "வள்ளிக்கு வாய்த்தவன்" என்னும் பொருள் பற்றி அளவையூர் அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி கதாப்பிரசங்கம் செய்வார்.

# டிசம்பர் 27-ல் ரயில்வேக்கு 100 வயது

கொழும்பு, ஞாயிறு

இலங்கை ரயில்வே, வருகிற டிசம்பர் 27-ம் திகதி தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவிருக்கிறது. 1864-ம் ஆண்டு டிசம்பர் 27-ம் திகதி முதலாவது ரயில் கொழும்பிலிருந்து அம்பேபுஸ்ஸவுக்கு பிரயாணம் செய்தது.

நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் போது முக்கிய ஸ்டேஷன்கள் தீபாலங்காரம் செய்யப்படும், முக்கிய ரயில்கள் அலங்காரம் செய்யப்படும்.

முதலில் ஓடிய ரயிலைப் போன்ற ஒரு ரயில், நூறு ஆண்டுகளுக்குமுன் அணிந்திருந்ததைப் போன்று உடைகளணிந்த பிரயாணிகளுடன் கொழும்பிலிருந்து அம்பேபுஸ்ஸவுக்குச் செல்லும்.

ரயில்வே ஊழியர்கள் சகலரும் இந்தக் கொண்டாட்டத்தில் பங்கு பற்றிக் கொள்ளுமாறு ரயில்வே ஜெனரல் மானேஜர் விண்ணப்பித்திருக்கிறார்.

# 'கீழ்ப்படிவுள்ளவராக இருங்கள்'

## மாணவருக்கு புத்திமதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மாணவர்கள் எப்போதும் கீழ்ப்படிவுள்ளவராக இருக்க வேண்டும். வருங்காலத்தில் பல துறைகளிலும் தொழிலுக்குச் சென்று மற்றையோருக்குக் கீழ்ப்படிந்து நடத்தற்கு, நல்லவர்கள் என்று வாழ்தற்கு இப்பொழுதிருந்தே ஆயத்தம் செய்துகொள்ளவேண்டும். மாணவர்களாகிய நீங்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து மிகவும் அமைதியுடன் இப்போது இருக்கிறீர்கள்; கீழ்ப்படிதலுக்கு பாடசாலையிலேயே அத்திவாரமிடப்படுகிறது. கீழ்ப்படிவும், களங்கமற்ற குழந்தையுள்ளமும் கொண்ட நல்லவர்கள்தான் இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெற முடியும்."

சுவாமிசச்சிதானந்தயோகீஸ்வரர் சென்ற வியாழக்கிழமை நல்லூர் சாதன பாடசாலையில் மாணவர்களுக்கு உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். விழாவிற்குத் தலைமைவகித்த பாடசாலைத் தலைமையாசிரியர் சுவாமிக்கு நன்றி தெரிவித்தார்.

# "எல்லோரது உயிரும் புனிதமாக மதிக்கப்படவேண்டும்

## சமூக விரோத சக்திகள் உறுதியுடன் நசுக்கப்படும்"

### ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் குடியரசு தினச் செய்தி

புதுடில்லி, ஜன. 26

**இந்தியாவில் கண்ணியம், ஒற்றுமையுடன் வாழ சகல பகுதியினருக்கும் உரிமை உண்டு என்றும், எல்லோரது உயிரும், சுதந்திரமும் புனிதமானதாய் மதிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் குடியரசு தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வானொலிச் செய்தியில் கூறினார்.**

நாட்டுக்கு வெளி அபாயம் குறையாதிருக்கும் இச்சமயத்தில் சமூகவிரோதசக்திகள் உறுதியுடன் அடக்கப்படும் என்றும் அவர் கூறினார்

பிரதமர் நேரு விரைவில் குணமடைய வேண்டும் என வாழ்த்திய ஜனாதிபதி, ஊக்குவிக்கும் நேருவின் தலைமை, நெருக்கடியான சமயத்தில் நமக்குக் கிடைத்திருப்பது இந்தியாவின் பாக்கியம் என்றும் நமது லட்சியங்களுக்கு நேருஜி ஒரு பிரதிபலிப்பாக விளங்குகிறார் என்றும் கூறினார். இந்தியாவுக்குச் சரியான வழிகாட்டுவதில் எவரையும் விட அவரே அதிக பங்கை வகித்திருக்கிறார் என்றும் விஞ்ஞான ரீதியான நவீன வழிகாட்டலை அவர் மேற்கொண்டிருக்கிறார் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சீனாவுடனுள்ள பிரச்னைகளை அமைதியுடன் தீர்ப்பதே இந்தியாவின் லட்சியம் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இன்று குடியரசு தினத்தை முன்னிட்டு 33பேர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

குஜராத்தைச் சேர்ந்த எழுத்தாளரும், எம். பி.யுமான காகாசாகிப் காலேல்கார் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த பண்டித கோபிநாத்கவிராஜ் ஆகியோருக்கு "பத்மவிபூஷன்" விருதுகள் வழங்கப்பட்டன.

புகழ்பெற்ற நாவலாசிரியர் ஆர். கே. நாராயணன், டி. என். ராமச்சந்திரன் ஆகியோருக்கு "பத்மபூஷன்" விருதுகள் வழங்கப்பட்டன.

கிரிக்கெட் ஆட்டக்காரர் எம். ஜே. கோபாலன், ஹாக்கி வீரர் சரஞ்சித்சிங், ஸ்ரீமதி அம்புஜம்மாள், மந்திரவாதி பி ஸி சர்க்கார் ஆகியோர் "பத்மஸ்ரீ" விருதுகளைப் பெற்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன், ரஷ்யஜனாதிபதி திரு. பிரஸ்னேவ், பிரதமர் குருஷ்சேவ், லாவோஸ், பாகிஸ்தான், சீனா, நைஜீரியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஆகியோர் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுக்கு குடியரசு தினத்தை முன்னிட்டு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

**ரஷ்யாவிலும் கொண்டாட்டம்**

ரஷ்யாவின் பலபகுதிகளிலுமுள்ள மக்களும் இந்தியக் குடியரசு தினத்தைக் கொண்டாடினார்கள். மாஸ்கோவில் மட்டும் 14 குடியரசுதின வைபவங்கள் நடைபெற்றன. மாஸ்கோ சர்வகலாசாலையில் நடைபெற்ற வைபவம் மிகவும் சிறப்புடன் விளங்கியது. ரஷ்யாவிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. டி. என். கால், குடியரசு தினத்தை முன்னிட்டுமாஸ்கோ ரேடியோமூலம் பேசினார். ரஷ்யப்பத்திரிகைகள் குடியரசு தினம் சம்பந்தமான விசேஷ கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தன.

## குருஷ்சேவ்யோசனை: நேருவரவேற்பு

புதுடில்லி, ஜன. 26

பிரதேச தகராறுகளையும், எல்லைப் பிரச்னைகளையும் தீர்க்க பலாத்காரத்தை உபயோகிக்கக்கூடாதுஎன திரு. குருஷ்சேவ் தெரிவித்த யோசனையை நேரு வரவேற்றிருக்கிறார். திரு. குருஷ்சேவின் கடிதத்திற்கு திரு. நேரு அனுப்பியுள்ள பதிலில், படைபலத்தை உபயோகிப்பதின் மூலம் எந்தப் பிரச்னையையும்தீர்க்கமுடியாது என்றும், திரு. குருஷ்சேவின் யோசனைபற்றி முக்கிய உலகத்தலைவர்கள் ஆலோசிப்பார்கள் எனக்கருதுவதாயும் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன், பிரிட்டிஷ் பிரதமர் சர் ஹியூம் ஆகியோரும் திரு. குருஷ்சேவுக்குப் பதில்அனுப்பியிருக்கிறார்கள்.

—

## கென்யா

நைரோபி, ஜன. 26

கென்யாவில்பிரிட்டிஷ் துருப்புக்கள் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

—

## கிரிக்கெட்

பம்பாய், ஜன. 26

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இந்தியா தன் 2-வது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 249 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

—

## பாகிஸ்தான் நிராகரிப்பு?

புதுடில்லி, ஜன. 26

இரு நாடுகளின் வகுப்புக் கலவர நிலைபற்றி இந்திய பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகள் சந்திக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட அழைப்புக்கு பாகிஸ்தான் பதிலளித்திருக்கிறது. இந்தப் பதில் ஆராயப்பட்டு வருவதாயும், மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது, பாகிஸ்தான் அதை நிராகரித்து விட்டதாகவே தெரிவதாயும் இந்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

—

## கட்டிவராத மாடுகளுக்கு...

பெங்களூர், ஜன. 26

"பிரம்மாண்டமான மாடுகளைக் கட்டிப் பராமரிப்பது தேசிய ரீதியில் வீண்விரயமாகும்" எனமைசூர் ரெவன்யூ மந்திரி திரு. கிருஷ்ணப்பா இங்கு கருத்தரங்கொன்றில் கூறினார்.

"மற்ற நாடுகளில் மனிதர்கள் பசுமாடுகளைத் தின்கிறார்களென்றால், நம்நாட்டில் இன்று பசுமாடுகள் மனிதர்களை விழுங்கி வருகின்றன. நாடு முழுவதிலும் மாடுகள் இனத்தை மேம்படுத்த வேண்டுமென்றால், கட்டிவராத மாடுகளுக்கெல்லாம் காயடித்துவிடவேண்டும்" என்றும் மந்திரி கூறினார்.

—

## யுதாண்ட். பர்மா செல்வார்

நியூயோர்க், ஜன. 26

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தமது தாயகமான பர்மாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமென விடுக்கப்பட்டிருந்த அழைப்பை ஏற்றுள்ளார்.

இவர் மார்ச் மாதத்தில் அங்கு விஜயம் செய்வாரென நம்பப்படுகிறது.

—

## பதவி ஏற்பு

கொஹிமா, ஜன. 26

திரு. ஷிலு ஆவோ தலைமையிலுள்ள நாகா மந்திரிசபை நேற்று பதவி ஏற்றது.

## மத்திய அரசாங்கத்துக்கு இரு சீர்திருத்தங்கள்

### ராஜாஜி யோசனை

சென்னை, ஜன. 26

மத்திய அரசாங்கத்தில் பிரதம காரியதரிசி பதவி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்த வேண்டும் என்றும், கண்ட்ரோல்கள் லைசன்ஸ்கள் ஆகியவற்றை நிர்வகிக்க அரசியல் சார்பற்ற போர்டு ஒன்றை நியமிக்கவேண்டும் என்றும் ராஜாஜி யோசனைகூறினார்.

"புதுடில்லி நிர்வாக இயந்திரம் சகல வகையிலும் தனித்தனியே பிரிந்து செயல்படும் வகையிலேயே இருக்கிறது. ஒவ்வொரு இலாகாவும் ஒரு ஜமீந்தாரைப்போல் எப்படியெல்லாம் செலவு செய்யலாம் என்பதிலேயே கண்ணாய் இருக்கிறது. மற்ற இலாகாக்கள்பற்றி இவர்கள் கவலைப்படுவதே இல்லை. எல்லா இலாகாக்களும் ஒன்றுக்கொன்று வக்கரித்துக்கொண்டு செல்கின்றன. எல்லா இலாகாக்களுக்கும் சேர்த்து ராஜ்யங்களிலிருப்பதைப்போல் டில்லியிலும் பிரதம காரியதரிசி பதவி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துவதே இதைத் தீர்ப்பதற்கான வழி.

இப்போது டில்லியில் மந்திரிசபைக் காரியதரிசி என்று ஒருவர் இருக்கிறார். ஆனால் பல்வேறு இலாகாக்களில் அன்றாட வேலைகளில் ஒரு இணக்கத்தை ஏற்படுத்தும் வேலை இவருடையதல்ல. எல்லா விஷயங்களிலும் பிரதம மந்திரியின் முழு ஆதரவையும், அந்தஸ்தையும், மரியாதையையும் பெற்ற அனுபவம் மிகுந்த சக்திமிக்க சீனியர் அதிகாரி ஒருவரை பிரதம காரியதரிசியாக நியமிக்க வேண்டும்" என்றும் ராஜாஜி கூறினார்.

"இதே அளவிற்கு மிகவும் முக்கியமான இன்னொரு யோசனை கண்ட்ரோல்கள், லைசன்ஸ்கள் விஷயமனைத்தையும் கவனிக்க அரசியல் சார்பற்ற ஒரு போர்டை நியமிக்க வேண்டுமென்பது. பப்ளிக் சர்வீஸ்கமிஷன், ஆடிட்டர்ஜெனரல், சுப்ரீம்கோர்ட்டுக்குள்ளது போன்ற அதிகாரமும், கூடுமானமட்டும் சுயேச்சையாக இயங்கக்கூடியதுமாக இந்த போர்டு இருக்கவேண்டும்" என்றும் ரஜாஜி கூறினார்.

## "காஷ்மீர் கொந்தளிப்புக்கு பாக். ஏஜெண்டுகளே காரணம்"

### இந்திய அதிகாரி அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 26

இந்திய உள்நாட்டிலாகா காரியதரிசி திரு. விஸ்வநாதன் ஸ்ரீநகருக்குச் சென்றிருக்கிறார். காஷ்மீரில் ஆர்ப்பாட்டங்களோ ஊர்வலமோ நடத்த அனுமதிக்காமலிருக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாய் அவர் கூறினார். விஷமிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காஷ்மீரில் பொலிசார் தாக்கப்பட்டிருப்பது குறித்துத் தாம் வருந்துவதாயும் அவர் கூறினார்.

காஷ்மீரில் சட்டவிரோதமாகப் புகுந்துள்ள பாகிஸ்தானியர்தான் குழப்பம் ஏற்பட்டதற்குக் காரணம் என்றும் அங்கு கொந்தளிப்பை ஏற்படுத்த பாகிஸ்தான் ஏஜண்டுகள் முயற்சி செய்கிறார்கள் என்றும் ஆனால் சமூக அமைதியைப் பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## தி. மு. க.வில் சிலர் ராஜினமா: அபேட்சகர் பற்றி அதிருப்தி

சென்னை ஜன. 26

சென்னை நகரசபைத் தேர்தலில் சில தொகுதிகளுக்குப் பொறுக்கியெடுக்கப்பட்ட தி. மு. க. அபேட்சகர்கள் குறித்து கழகத்தில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாயும் அதன் விளைவாகப் பிளவு ஏற்படுமெனத் தோன்றுவதாயும் அறிவிக்கப்படுகிறது.

அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்து முடிந்தபோது சழகத்தால் நியமிக்கப்பட்டவர்களையே எதிர்த்து 3 தி. மு. க. வினர் சுயேச்சையாளர்களாகப் போட்டியிடுவது காணப்பட்டது. அவர்களில் பிரதானமானவர்கள் முன்னாள் மேயர் அப்துல் காதரும், நகரசபை தி. மு. க. அங்கத்தினர் துரைக்கண்ணுமாகும்.

தி. மு. க. அபேட்சகர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டவிதம் குறித்து கழகத்தின் ஒரு பிரிவினர் ஆத்திரமடைந்திருப்பதாய்க் கூறப்படுகிறது. நகரசபைத் தேர்தலில் தி. மு. க. முஸ்லிம் லீக் உடன்பாடு குறித்து ஒரு பிரிவினர் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மாஜி மேயர் அப்துல் காதருக்குப் பதிலாக, ஒரு முஸ்லிம் லீக் அபேட்சகருக்கு ஆதரவளிக்க தி. மு. க. முடிவு செய்ததை ஆட்சேபித்து, புதுப்பேட்டை டிவிஷன் தி. மு. க. காரியதரிசி திரு. ஷாகுல் ஹமீதும், மற்றும் சிலரும் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. மற்றொரு தொகுதியிலும் சிலர் ராஜினமாச் செய்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

—

## பிரதமர் வாழ்த்து

கொழும்பு, ஞாயிறு

இந்தியக் குடியரசுத் தினம், ஆஸ்திரேலிய தேசிய தினம் ஆகியவற்றை முன்னிட்டு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்.

—

## சென்னை மாநகரசபை 510 பேர் போட்டி

சென்னை, ஜன. 26

சென்னை மாநகரசபையின் 100 ஸ்தானங்களுக்கு மொத்தம் 510 அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 9 பேர் பெண்கள்.

—

## ஷம்சுதீன் கண்டனம்

ஸ்ரீநகர், ஜன. 26

"புனிதகேச திருட்டு விஷயமாக காஷ்மீரில் வகுப்புக் கலவரத்தை மூட்டிவிட முடியாமல் போனபிறகு, தொல்லை கொடுக்க பாகிஸ்தான் துடிதுடிக்கிறது" என பிரதமர் ஷம்சுதீன் கூறினார். "ஐ. நா. பாதுகாப்பு சபையை அது பிரசாரத்திற்காகப் பயன்படுத்த முயற்சிக்கிறது" என்றும் அவர் கூறினார்.

## பர்மாவில் 2,00,000 பாகிஸ்தானியர் சட்டவிரோத குடியேற்றம்!

### பர்மிய பத்திரிகைகள் கவலை

ரங்கூன், ஜன, 26

பர்மாவில் சட்டவிரோதமாகப்புகுந்துள்ள 2 லட்சம் பாகிஸ்தானியர் பற்றி பர்மியப் பத்திரிகைகள் கவலை தெரிவித்திருக்கின்றன. "இவர்களை பாகிஸ்தான் திருப்பியழைத்துக்கொள்ளாமல் இருப்பது விந்தையே" என்றும், "வருங்காலத்தில் இது பர்மாவுக்கு ஒரு பிரச்னையாய் இருக்கும் என்றும்" என்றும் "ரங்கூன் டெய்லி" பத்திரிகை கூறியிருக்கிறது.

"சட்ட விரோதமாகக் குடியேறியுள்ள பாகிஸ்தானியரைச் சமாளிப்பது பர்மிய அதிகாரிகளுக்கு ஒரு பெரிய பிரச்னையாய் இருக்கிறதென்றும், கிழக்குப் பாகிஸ்தான் கூடுதலாக உள்ள தனது மக்களை நாலா இடங்களுக்கும் அனுப்பிவருகிறதென்றும், இதேபோல்தான் இந்தியாவிலும் ஏராளமான பாகிஸ்தானியர் சட்டவிரோதமாகப் பிரவேசித்திருக்கிறார்கள் என்றும் "பர்மா கன்டியன்" பத்திரிகை கூறியுள்ளது.

## போர்னியோ எல்லையில் சண்டை நின்றது

ஜாகர்த்தா, ஜன. 26

சரவாக், போர்னியோ எல்லைகளிலுள்ள இந்தோனேஷியப் படைகளுக்கு விடுக்கப்பட்ட யுத்தநிறுத்த உத்தரவு அமுலாகி வருகிறதென்றும், எனினும் புதிய நிலைமைகளுக்குத் தயாராகுமாறு அப்படைகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது. கோலாலம்பூரிலிருந்து கிடைத்த செய்தியின்படி மலேசிய வீரர்களும் யுத்தநிறுத்தத்தை அமுல் நடத்துகிறார்கள் என அறிவிக்கப்படுகிறது.

சண்டை நிறுத்தப்பட்டபோதிலும், மலேசியாவுக்கெதிரான அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜாகர்த்தா பத்திரிகைகள் கூறின.

## எம். எல். ஏ.க்கு இனி ரூ. 250 சம்பளம்

சென்னை, ஜன 26

தமிழ்நாட்டு கீழ் சட்ட சபை அங்கத்தினர்களின் சம்பளத்தை ரூ. 150 லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தவேண்டுமென சுதந்திரக்கட்சி அங்கத்தினர் தெரிவித்த சிபார்சை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் ஏற்று, விரைவில் இதற்கான மசோதா கொண்டு வருவதாய்க் கூறினார்.

# செய்திச் சுருக்கம்

தமிழ்ப் பாடசாலைகளில் விஞ்ஞான (தமிழ்) பட்டதாரிகள் போதியளவு இருப்பதால், குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதாக இருந்தால் தமிழ் (விஞ்ஞான) பட்டதாரிகள் சிங்களப் பாடசாலைகளில் ஆசிரியராக நியமிக்கப்படலாமென்று தமிழ்ப் பட்டதாரிகளின் தூதுக்குழுவுக்கு கல்வி மந்திரி திரு. கலுகல்ல தெரிவித்துள்ளார். காலியில் 40 பட்டதாரி ஆசிரியர்களுக்கு இடமிருப்பதாகவும் இதற்கு வரும்பினால் தாம் அவர்களை அனுப்ப வசதி செய்துதருவதாகவும் கல்வி மந்திரி தெரிவித்துள்ளார்.

★

அரசாங்கத்தின் உத்தியோக மொழிக் கொள்கையை சரியானபடி கடைப்பிடித்து நடக்கவேண்டுமென்றுபதில் ஆடிட்டர் ஜெனரல், தமது இலாகா உத்தியோகத்தர்களுக்கு சுற்று நிருபத்தின் மூலம் தெரிவித்துள்ளார். ஆடிட்டர் ஜெனரல் இலாகாவிலிருந்து சிரேஷ்ட அதிகாரியொருவர் திறைசேரிக்கு ஆங்கிலத்தில் எழுதிய மூன்று கடிதங்களும் திருப்பி அனுப்பப்பட்டதுடன் சிங்களத்தில் எழுதுமாறு கூறப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பதில் ஆடிட்டர் ஜெனரல் திரு. பி. எல். டபிள்யூ. பெர்ணண்டோ தமது ஊழியர்களுக்கு மேற்கண்ட சுற்று நிருபத்தைவிடுத்தார்.

★

கல்வி அமைச்சின் உத்தரவுகளை அமுல் நடத்துவதில் கல்வி இலாகா வீண் தாமதம் செய்வதாக அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது.

★

அரசாங்கம் தற்போதைய மொழிக் கொள்கையைக் கைவிட்டு ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் உத்தியோக மொழியாக்கவேண்டுமெனக் கோரி நீர்கொழும்பு மாநகரசபை சமீபத்தில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து நீர்கொழும்பு நகர வரியிறுப்பாளர் சங்க மத்திய கமிட்டி ஒரு பொதுக் கூட்டம் நடத்தியது. இக்கூட்டத்தில் மாநகரசபையின் தீர்மானத்தைப் பலர் கண்டித்தனர்.

★

கலிகமுவா எம். பி. திரு. பி. பி. பாலசூரியா ஒரு கூட்டத்தில் பேசுகையில் தோட்டத் தொழிலாளர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யூனியனில் அல்லது இடதுசாரி ஐக்கிய முன்னணி தொழிற் சங்கத்தில் சேரவேண்டுமேயல்லாது யு. என். பி.யின் தொழிற் சங்கத்தில் சேரக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

★

பதுளையில் சுமார் மூவாயிரம் தமிழ் பாடசாலைப் பிள்ளைகளை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகள் சம்பந்தமாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஸீஸும் பொதுக் காரியதரிசி திரு. ஏ. கே. கந்தசாமியும் உதவி வித்தியாதிபதி டாக்டர் ஏ. டபிள்யு பி. குருகேயை சந்தித்துப் பேசினர். இது விஷயமாகத் தாம் நேரில் சென்று ஆராயவிருப்பதாக டாக்டர் குருகே தெரிவித்தார்.

★

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சி பெறும் ஆசிரியர்களின் தொகையை அதிகரிப்பது, அளுத்கம முஸ்லிம் ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி அளிப்பதற்கு கூடிய தொகையினரை எடுப்பது உட்பட சில கோரிக்கைகளுக்கு கல்வி மந்திரி இணக்கம் தெரிவித்[illegible]த் தெரிகிறது. [illegible] முஸ்லிம் ம[illegible] தேவைகள் பற்றி [illegible] ஒரு தூதுக்குழு பேட்டி கண்டது.

புதிய சபாநாயகர் திரு. ஹியூ பெர்ணண்டோவின் அந்தரங்கக் காரியதரிசியாக ஜனாப் இஸ்டீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

★

இந்திய, ஆஸ்திரேலிய தேசிய தினங்களையொட்டி இரு நாட்டு பிரதம மந்திரிகளுக்கும் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தார்.

## மருத்துவதாதிகள் தொழில்நுட்பசேவையாளர்?

யாழ்ப்பாணம், திங்கள்

மருத்துவத் தாதிமார்கள் தொழில்நுட்ப சேவையாளர்களாகக் கருதப்படுவரென்று சுகாதார இலாகாவிலிருந்து அகில இலங்கைத் தொழிலாளர் சங்கத்துக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. மருத்துவத்தாதிமார்கள் தொழில்நுட்ப சேவையாளர்களாகக் கருதப்பட்டால் உத்தியோக மொழிச்சட்டத்தினால் பாதிக்கப்பட மாட்டார்களென நம்பப்படுகிறது. இவர்களை தொழில்நுட்ப சேவையாளர்களாகக் கருதவேண்டுமென தொழிலாளர்சங்கம் கோரியிருந்தது.

## இலவச வைத்தியசாலைக்கு அரசாங்க நன்கொடை

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவு கிராமச்சங்க இலவச சித்த ஆயுர்வேதவைத்தியசாலைக்கு ரூ. 2758 அரசினரால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலை 14.11.56ல் ஆரம்பிக்கப்பட்டதென்பதும், இதுகாலவரையும் நன்கொடை வழங்கப்படவில்லை என்பதும் இம்முறையே அரசாங்க நன்கொடை வழங்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதுமை அரங்கினரின் சிங்கள நாடகம்

கொழும்பு, ஞாயிறு

தமிழ் நாடக மேடையில் தமது நாடகங்களை மேடையேற்றிவந்த 'புதுமை அரங்கு' குழுவினர் 'புரொபஸர்' என்ற சிங்கள நாடகமொன்றை பெப்ரவரி நாலாம் திகதி ஹவலக் டவுன் மண்டபத்தில் நடத்த இருக்கிறார்கள்.

இது இவர்களது இரண்டாவது சிங்கள நாடகமாகும்.

டாக்கா, ஜன. 26

கிழக்குப் பாகிஸ்தான் மாஜி மந்திரி திரு. மனோரஞ்சன் தார், மைமன்சிங்கில் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.


ஒரு ஆரோக்கிய குழந்தையும் ...குதூகலிக்கும் தாயும்



..நன்றி லக்டோஜனுக்கே

உலகப் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான முழு ஆடைப் பால் உணவான லக்டோஜனில் இப்பொழுது ஒன்பது மேலதிக விட்டமின்களும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளது. பலம் ஊட்டப்பட்ட இந்த விட்டமின்களால் லக்டோஜன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது— உங்கள் குழந்தை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதைக் கவனியுங்கள். தாய்ப் பால் இல்லாவிட்டால்......லக்டோஜனை நாடுங்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்.

| | |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் பன்டோதெனேட் |
| விட்டமின் B | விட்டமின் $B_{12}$ |
| விட்டமின் $B_2$ | விட்டமின் C |
| விட்டமின் PP | விட்டமின் D |
| விட்டமின் $B_6$ | இரும்பு |

நீங்கள் லக்டோஜனை நம்பலாம்



# வானொலி நிகழ்ச்சிகள்

திங்கள் 27-1-64

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

6-45 பாமாலை, 6-55 கிறிஸ் தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 பாங்கு, 6-50 கிராமசஞ்சிகை, 6-45 வீணை-டி. எஸ். மணிபாகவதர், 7-15 பாட்டு-விக்னேஸ்வரி கைலேஸ்வரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி-உருதுப்பாடல்கள், தொடர் நாடகம்—தாஜின் நிழலில்—எம். ஏ. ரஹ்மான், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர்விருப்பம்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை: 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 இசைக் கதம்பம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாலதி வேங்கடராமன்—பாட்டு, 1-30 வாசதிய இசை, 1-50 கதம்பம், 2-40 பொன்னொளிர் பாரதம்--தொடர் நிகழ்ச்சி.

மாலை 5-15திரைப்படஇசை, 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 ஆகாஷ் வாணி ஒலிப்பதிவுகள், 7-50 தபால் பெட்டி, 8-00 தாளவாத்தியக் கச்சேரி, 8-15 புல்லாங்குழல்--ஆ இ. ரே. வித்வான், 8-45 தேசபக்திப்பாடல்கள், 9-15 வெற்றிவாகை — தொடர்நிகழ்ச்சி, 9-30 சுலோசனு மகாதேவன்—பாட்டு.

## புங்குடுதீவுக்கு குழாய் நீர் வசதி

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவில் நிலவிவரும் நிரந்தர குடிநீர் பஞ்சத்தை நிவர்த்திபண்ணும் பொருட்டு, குழாய் மூலம் நீர் விநியோகிப்பதற்கு ஏற்ற இடங்களைப் பார்வையாளர்கள் பார்வையிட்டுசென்றுள்ளனர்.

நல்லநீருள்ள பகுதிகளைப் பரிசோதனை செய்வதற்காக பரிசோதர்கள் மார்ச் மாதத்தில் இங்கு வந்து பரிசோதனை நடத்தவிருக்கிறார்கள்.

இப்பரிசோதனை திருப்தியளித்தால் கூடிய விரைவில் குடிநீர் பஞ்சம் நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏப்ரல் 16-ல் கம்யூனிஸ்ட் மகாநாடு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது காங்கிரஸ் மகாநாடு ஏப்ரல் 16 முதல் 19-ந் திகதி வரை நடைபெறும்.

குறித்த மகாநாட்டில் கொண்டுவரப்படும் அரசியல் தீர்மானங்கள், கட்சியின் மத்திய கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

சண்முகதாசன் ஆதரவாளர்கள் பற்றிய விஷயமும் மகாநாட்டில் இடம்பெறும்,

## வங்கியின் கடனுதவி

பருத்துத்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதிக் கூட்டுறவுச் சங்கங்களின் மகாநாடொன்று புலோலி இந்து ஆங்கிலக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். கிழக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கம் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூட்டுறவு வங்கியில் தனிப்பட்டவர்களுக்கு சேமிப்பு வசதி பற்றி விளக்கம் கொடுத்ததுடன் பொருளாதாரவிருத்தி அடிப்படையில் கூட்டுறவு வங்கி பலநோக்குச்சங்கங்களுக்குச் சிறு கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலானவைக்கு கடன் கொடுக்க வகை செய்திருப்பதாகவும் தெரிவித்தார்.





ராணி

இலங்கையின் முதல்முதலானதும், அதிசிறந்ததுமான சந்தனசோப்பு

தயாரிப்பாளர்கள்: சுவதேசி இன்டஸ்ட்ரியல் வர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

SW/GC/25

வருஷ டிப்பசிட் வட்டி

8%

சிலோன் றிசேவ் லிமிற்றெட், வங்கி யாழ்ப்பாணம்.


### விளம்பரம்

நெடுந்தீவுப் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் காலியான இடங்களுக்கு விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. மோட்டார் வள்ளக் "கொண்டக்ரர்"

தகைமைகள்: (அ) கனிட்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலாவது சித்தியெய்தியவராகவும்,

(ஆ) வயது 25-க்கும் 40-க்கும் இடைப்பட்டவராகவும்,

(இ) ரூபா 500 ரொக்கப் பிணைகட்டக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: 120-5x5-7x5-180.

2. குமாஸ்தா.

தகைமைகள்: (அ)கனிட்ட தராதரப்பத்திரப் பரீட்சையிலாவது சித்தியெய்தியவராகவும், (எண், ஆங்கிலம் பாடங்களுக்கு விசேடமதிப்பு வழங்கப்படும்.)

(ஆ) வயது 22-க்கும் 30-க்கும் இடைப்பட்டவராகவும்,

(இ) ரூபா 500 ரொக்கப் பிணையும், ரூபா 1000-க்கு ஆதனைப்பிணையும் கொடுக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: 75-4x5-6x5-125.

3. வெண்காயக்கூடு கொள்வனவாளர்கள் (ஒரு குறிச்சிக்கு ஒருவராக 3 பேர்)

தகைமைகள்: (அ) ஐந்தாம் வகுப்பிலாவது சித்தியெய்தியவராகவும்,

(ஆ) வயது 22-க்கும் 45-க்கும் இடைப்பட்டவராகவும்,

(இ) ரூபா 500-க்கு ஆதனப்பிணை கொடுக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

600 கூடைகளைக் கொண்ட ஒவ்வொரு கட்டிற்கும் ரூபா 2-50 சதவீதம் "கமிஷன்" கொடுக்கப்படும். கூட்டுக் கொள்வனவிற்குச் சங்கம் முற்பணம் கொடுக்கும்.

பொதுநிபந்தனைகள்:

விண்ணப்பக்காரர்கள் பின்வரும் தகைமைகளில் எதையாவது பெற்றிருப்பின் அது விசேட அம்சமாகக் கருதப்படும்.

(அ) கூட்டுறவுப் பயிற்சி.

(ஆ) தற்காலிக பதவிகளில் சேவைசெய்த அனுபவம்.

தெரிவு செய்யப்படுபவர்களது அனுபவத்தையும் தகைமையும் பொறுத்துச் சம்பளம் கூட்டிக் கொடுப்பதும் ஆலோசிக்கப்படும்.

கேட்கப்பட்ட விபரங்களுடன் சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களின் பிரதிகளுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு 10-2-1964-ம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம்,
நெடுந்தீவு.

(ஒப்பம்) ஞா. மரியநாயகம் பிள்ளை,
கௌரவ பொதுக் காரியதரிசி.

1776

## பார்த்தசாரதிக்கு அழைப்பு

புதுடில்லி, ஜன. 26

ஆலோசனைகளுக்காக அவசரமாக வருமாறு பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைமமிஷனர் திரு. பார்த்தசாரதி அழைக்கப்பட்டிருக்கிறார். உபகண்டத்தில் வகுப்பு சௌஜன்யம் ஏற்படுத்துவது சம்பந்தமாக இருதேச உறவுபற்றி அவருடன் ஆலோசனை நடக்கும்.

### அறிவித்தல்

6-2-1964 வியாழக்கிழமை காலை 10 மணி வரை கோப்பாய்க் கிராமசபைத் தலைவரால் "கோப்பாய் தெற்கு 9-ம் வட்டாரம் அரசடி ரேட்டு வேலைக்கு" "சீல்" இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வடபகுதி (மேல்) உள்ளூராட்சி உதவி அதிபரின் காரியாலயத்தில் ரூ. 5000/- க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் கேள்விப்பத்திரங்கள் 5-2-64 நண்பகல் 12 மணி வரைக்கும் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரப் பணமாக ரூ. 2/-ம், கேள்விப்பத்திரக்கட்டுப்பணமாக ரூ. 10/-ம் செலுத்திய பின்னரே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூ. 2/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மேற்கொண்ட விபரங்களெதுவும் அறியவிரும்பின்கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

பொ. தி. சம்பந்தன்,
தலைவர்,
கிராமசபை, கோப்பாய்.
கிராமசபைக் காரியாலயம்,
கோப்பாய்,
24-1-1964. 1777

### வரி விளம்பரம்

#### வாடகைக்கு

யாழ்ப்பாணப் பட்டினத்தில், தொலைபேசி முதலிய சகல நவீன வசதிகளுடனும் அமைந்த 2000 சதுர அடி முதல் மாடி ஆபீஸ் இடம் உண்டு.

ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மனுச்செய்க. 1896 A

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உடுவில் வீதியில் எட்டுப் பரப்பில் அமைந்த மின்சாரமும், நாலு பெரிய அறைகளும் மற்றும் எல்லா வித நவீன வசதிகளுடனும் கூடிய ஒரு வீடு வாடகைக்கு உண்டு.

"வீடு"ஈழநாடு மேற்பார்த்து என்று மனுச்செய்க. 1897

#### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ளதும், புத்தம் புதிய பற்றறியும், என்ஜினும் உள்ள இ. என். ஆயிரம் வரிசையில் உள்ள ஏ. 50 மோட்டார் ஒன்று விற்பனைக்குண்டு. 1964-க்குரிய லைசென்ஸும் உண்டு. பெருமாள், எக்சைஸ் அதிகாரி, பருத்தித்துறை என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும்.

1906

#### நன்றி நவிலல்

எனது மனைவியின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட அன்பர்களுக்கும், சுற்றத்தினருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வி. செ. இராசதுரை, தொண்டைமானாறு, 24-1-64. 1904

## பிச்சைக்காரர் தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் புதுத்தபாற்கந்தோர் கட்டடத்துக்கு முன்னல் 70 வயது மதிப்பிடக்கூடிய ஒரு வயோதிப பிச்சைக்காரர் பக்கத்தில் ஒரு கிருமிநாசினி தகரத்துடனும் சாராயப்போத்தலுடனும் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

இவரது மரண விசாரணையின்போது சாட்சியமளித்த சுப்பிரமணியம் துரைசாமி, இவர் ஒரு பிச்சைக்காரர் என்றும் தமது வீட்டில் வந்து தினமும் பிச்சை எடுப்பது வழக்கம் என்றும் கூறினார்.

மரண விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# கொழும்புத்துறை கொலைவழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

சிறிய தந்தையைக் கொலை செய்ததாகச் சந்தேகத்தின் மீது மூன்று சகோதரர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், சென்ற வருடம் டிசம்பர் மாதம் 12-ந் திகதி கொழும்புத்துறையைச் சேர்ந்த ஜோசப் செல்வரத்தினம் என்பவரைக் கொலை செய்ததாக, கந்தையா இராசரத்தினம், கந்தையா யோகரத்தினம், கந்தையா ஜெயரத்தினம் ஆகிய மூன்று சகோதரர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. சுரசுவால்டன் முன்னிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணையை மற்றொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றும் இவ்வழக்கு விஷயமாக அட்டர்ணி ஜெனரலிடம் இருந்து தமக்கு எவ்வித உத்தரவும் கிடைக்கவில்லையென்றும் இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் கோரினர்.

திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. டி' கணேசலிங்கம், சந்தேக நபர்களை பிணையில் விட அனுமதி அளிக்குமாறு கோரினர்.

இக்கோரிக்கையை இன்ஸ்பெக்டர் ஆட்சேபித்தார்.

இன்ஸ்பெக்டரை நோக்கி அட்டர்ணி ஜெனரலிடமிருந்து உத்தரவு பெறுவிடில் அடுத்த தவணையின் போது சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்குத் தாம் தயங்கப் போவதில்லையென மாஜிஸ்டிரேட் தெரிவித்தார்.

"இந்த நீதிமன்றம் அட்டர்ணி ஜெனரலைப் பற்றியோ வேறுஎவரைப் பற்றியோ கவலைப்பட வேண்டியதில்லை. இதவிஷயத்தில் இட பொழுது இறுதித் தவணை கொடுக்கிறேன்" என்று மாஜிஸ்டிரேட் தெரிவித்து வழக்கை அடுத் மாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

நாடு முழுவதும்

## பெட்ரோலுக்கு ஒரேவிலை

### மந்திரி உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

நாடு முழுவதும் பெட்ரோல் விலையை ஒரேதரப்படுத்தும் விஷயம்பற்றி ஆலோசிக்குமாறு கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

தற்போது பெட்ரோல் விலை தூரத்திற்கேற்ப பல இடங்களில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துச் செலவு பாவனையாளர்களிட மிருந்து அறவிடப்படுகிறது. மந்திரியின் உத்தரவுப்படி பெட்ரோல் போக்குவரத்துச் செலவைப் பெட்ரோலியம் கார்ப்பரேஷனே ஏற்று கொழும்பிலுள்ள விலைக்கு எல்லா இடங்களிலும் பெட்ரோலை சப்ளை செய்யும். பெட்ரோல் விலையை ஒருதரப்படுத்தும் யோசனை கைத்தொழில் அமைச்சின் ஆலோசனைக் கமிட்டியினல் சிபார்சு செய்யப்பட்டது. கொழும்பில் சாதாரண பெட்ரோல் விலை ஒரு கலன் ரூபா 2-96. சூப்பர் விலை ரூபா 3-20.

## கோவில் விசேஷ உற்சவங்கள்

கொக்குவில், ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தைப்பூச உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

காலை 8 மணி முதல் அஷ்டோத்திர சகஸ்திர சங்காபிஷேகம் நடைபெறும். மாலையில் கதாட பிரசங்கமும் நாதஸ்வர இன்னிசைக் கச்சேரிகளும் இடம் பெறும்.

**மீசாலையில்**

மீசாலையில் வெள்ளை மாவடி விநாயகர் ஆலய சங்காபிஷேகம் நாளை நடைபெறவிருக்கிறது.

இதனை முன்னிட்டு அபிஷேகமும், விசேஷ தீபாராதனையும் நாளை நடைபெறும். திரு சீ. விநாசித்தம்பியின் கதாப பிரசங்கமும் இடம்பெறும்.

---

## ஆசிரியைகளுக்கு பாராட்டுபசாரம்

பருத்தித்துறை, சனி

மருதங்கேணி அரசினர் தமிழ் சைவவித்தியாசாலைமண்டபத்தில் மேற்படி பாடசாலையில் உதவி ஆசிரியைகளாகச் சேவை செய்து மாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியைகள் திருமதிகள் சே. புவனேஸ்வரி, கா. பார்வதிதேவி, சு. சரஸ்வதி ஆகிய மூவருக்கும் சேவைநலம் பாராட்டுவைபவமொன்று நடைபெற்றது.

பெற்றூர் ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட இவ்வைபவத்திற்கு பருத்தித்துறை எம் பி திரு. க. துரைரத்தினம் தலைமை தாங்கினர்.

திருவாளர்கள் பொ. சிவபாதசுந்தரம், ஏ. சுப்பிரமணியம், கி. ச. தலைவர் சி முதலையா ஆசிரியைகளின் சேவை நலன்களைப் பாராட்டிப் பேசினர்.

---

## "கூட்டுறவு பலவேகயா"

கொழும்பு, ஞாயிறு

சிங்களத்தில் கல்வி பயின்றவர்களைத் தொண்டர்படையாகக்கொண்ட புதிய இயக்கம் ஒன்று 'கூட்டுறவு பலவேகயா' என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், வடமாகாணத்தில் கடமையாற்ற விரும்பும் உத்தியோகஸ்தர்களின் பெயர் விபரங்களைச் சேர்ப்பதில் இந்த இயக்கம் தீவிரமாக உழைத்துவருவதாகவும் கூறப்படுகிறது.

எட்டு இயக்குநர்கள்சேர்ந்து இப்புதிய இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். திரு. ஏ. எம் ஆர். பண்டாராவின் தலைமையில் இவர்கள், வடமாகாணத்தில் கடமையாற்ற விரும்பும் அரசாங்க உத்தியோகஸ்தர்களைச் சேர்த்துவருகிறார்கள். இதுவரை 164 ஆசிரியர்களும், 21 குமாஸ்தாக்களும், 9 ஆஸ்பத்திரி பணியாளர்களும், 12 தாதிகளும், கார்ப்பரேஷனில் கடமையாற்றும் 11 உத்தியோகஸ்தர்களும், 3 டாக்டர்களும், 18 பஸ் கண்டக்டர்களும், 31 சில்லறை ஊழியரும் வடமாகாணத்தில் கடமையாற்ற விருப்பம் தெரிவித்துள்ளதின்பேரில் இயக்கத்தின் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதிய இயக்கம் தமிழருக்கு எதிரான இயக்கம் அல்லவென்றும் சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்கும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திரு பண்டாரா தெரிவித்தார். சிங்களத்தை உத்தியோக மொழியாக்குவதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்துக்கும், சிங்களம் படிக்க விரும்பும் தமிழர்களுக்கு ஒத்துழைப்பு நல்க இந்த இயக்கம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் திரு. பண்டாரா தெரிவித்தார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# சுகாதாரசேவை டைரக்டர் மீதான குற்றச்சாட்டுகள்

## முடிக்குரிய சாட்சியம் முடிவு

கொழும்பு, ஞாயிறு

சுகாதாரசேவை டைரக்டர் டாக்டர் டபிள்யூ. ஏ. கருணரத்னவுக்கெதிரான ஐந்து குற்றச்சாட்டுகள்மீது, அரசாங்க சேவைக் கமிஷன் நீதிமன்ற விசாரணையில் முடிக்குரிய தரப்பின் சாட்சியங்கள் முடிவடைந்தன. 16 பேர் சாட்சியமளித்தனர்.

நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு டி ஜி ஆர். குணவர்தன (தலைவர்), வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம் ஸ்ரீகாந்தா, மந்திரிசபைக் காரியதரிசி திரு. டி. ஜி. தயாரத்ன ஆகியோர் இந்த நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள் குற்றச்சாட்டுக்களில் பிரதான அம்சங்கள் சில வருமாறு:

"அரசாங்க சேவைக் கமிஷனுக்கு அவர் சமர்ப்பித்த அந்தரங்க தஸ்தாவேஜில் 4 தவருன அறிக்கைகளை கொடுத்திருந்தார்"

"இந்த அறிக்கையின் அடிப்படையில் ஓர் அரசாங்க அதிகாரியை ஓய்வுகாலத்திற்கு முன்பே, ஓய்வுபெறச் செய்ய முயன்றார்".

"அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்."

# இலங்கை அனுமதி வழங்காத யு. எஸ். கப்பல்

## இந்திய துறைமுகங்களில் பிரவேசிக்க அனுமதி

கொழும்பு, ஞாயிறு

இலங்கைத் துறைமுகத்தில் பிரவேசிக்க இன்னும் அனுமதி வழங்கப்படாத 'கிரீன் விச்பே' என்ற அமெரிக்க கடற்படைக் கப்பலுக்கு தனது துறைமுகங்களில் பிரவேசிக்க இந்தியா அனுமதி வழங்கியிருக்கிறது.

பம்பாய், கொச்சி, சென்னைத் துறைமுகங்களில் பிரவேசிக்க 'கிரீன் விச்பே' கப்பலுக்கு இந்திய அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

இந்தக்கப்பல் நேற்று பம்பாய்க்கு வந்திருக்கவேண்டுமெனத் தெரிகிறது.

5 தினங்கள் பம்பாயில் தங்கிவிட்டு, இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4-ம் திகதி அது சென்னைத் துறைமுகம் வரும். பெப்ரவரி மாதம் 17-ம் திகதி கொச்சிக்குச் செல்லும்.

இந்தக் கப்பலில் அணு ஆயுதங்கள் இருக்கிறதா என இலங்கைத் துறைமுகம் வருவதற்குமுன், இலங்கை அரசாங்கம் அமெரிக்காவைக் கேட்டிருந்தது. அமெரிக்காவிலிருந்து பதில் கிடைக்கும்வரை அனுமதி வழங்குதல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

பாரசீகக் குடாவில் வைக்கப்பட்டிருக்கும் கிரீன் விச்பே நல்லெண்ணச் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருப்பது இந்துசமுத்திரத்தில் 7-வது கடற்படை பிரவேசிப்பதற்கு ஒரு முன்னேடியா என அரசாங்க, ராஜதந்திர வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

இலங்கையின் கேள்விக்கு இதுவரை அமெரிக்கா பதிலளிக்கவில்லையாயினும், இக்கப்பலில் அவ்வித ஆயுதங்கள் எதுவுமில்லை எனக் கூறப்படுகிறது.

இந்தியக் கடற்படைப் பயிற்சிக்கான முக்கிய துறைமுகங்களான பம்பாயிலும், கொச்சியிலும் 'கிரீன்விச்பே' பிரவேசிப்பது குறிப்பிடத்தக்கது.

## கோலாகலமான . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியரசு வைபவத்தில் இந்தியா வந்துள்ள மவுண்ட் பேட்டன்பிரபு, மேற்கு ஜெர்மன் விஞ்ஞான மந்திரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ராஜ்யங்களின் தலைநகர்களிலும் குடியரசு தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்கத்தாவில் கவர்னர் ஸ்ரீமதி பத்மஜா நாயுடு தேசியக்கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். இதில் 1800 ராணுவ வீரர்களும், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

அஹமதாபாத்தில் முதன் மந்திரி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

சென்னையில் தமிழ் நாட்டு கவர்னர் ஸ்ரீ மேதி தேசிய கொடியை ஏற்றிவைத்து,அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

போபாலில் நடைபெற்ற குடியரசுதின வைபவத்தில் 25000-க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

மத்ய பிரதேச கவர்னர் திரு. பட்டஸ்கார் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

பாட்னா, பம்பாய் ஆகிய இடங்களிலும் குடியரசுதினம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோ, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. மகபகால், ஹங்கேரி, மங்கோலியா, ருமேனியா ஆகிய நாடுகளின் அதிபர்கள், ஆப்கானிஸ்தான் மன்னர், மொருக்கோ மன்னர் ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

# சேவை மாற்றம்



புங்குடுதீவைச் சேர்ந்தவரும் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, ஸ்ரீசண்முகநாத வித்தியாசாலைகளின் தலைமையாசிரியரும் முன்னாள் தீவுப்பகுதி ஆசிரிய சங்கத் தலைவரும், தீவுப்பகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபைத் தலைவரும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை, யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி ஆகியவற்றின் கருமகர்த்தாக்களுள் ஒருவருமாகிய திருவாளர் வேதவனம் அப்பாக்குட்டியார் சபாபதிப் பிள்ளை தமது நாற்பது வருடகால ஆசிரியசேவையின்மேல் (57 வயது) 31-12-63இல் ஓய்வுபெற்று, 1-1-64 முதல் நொத்தாரிசுவாகப் பயிற்சிபெறத் தொடங்கியிருக்கிறார்.

30-1-64 வியாழன் முதல்
சினிமாஸ் திரைகளில்
மகத்தான ஆரம்பம்
எஸ். எஸ். ராஜேந்திரன் — பத்மினி
நடித்த
காட்டு ரோஜா

இப்பொழுது திரையிடப்படுகிறது!
ராஜ் (நீர்கொழும்பு) குயின்லன்ட் (நுவரெலியா) விஜயா (அம்பாறை) வெம்பினி (கண்டி)
வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!
எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்
மற்றும் பலர் திறம்பட நடித்த
சரவணா பிலிம்ஸ்
பணத் தோட்டம்
தயாரிப்பு ஜி. என். வேலுமணி
டைரக்ஷன் கே. சங்கர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ராஜ்கபூர் — பத்மினி
நடித்த
ஜிஸ் தேஷ் மென் கங்கா பேதிஹை

மனோஹரா (யாழ்ப்பாணம்)
ரங்கராவ்—பானுமதி
நடித்த,
அன்னை

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.